# கற்பகம்



சரஸ்வதியே யுன்னைச்
சரணமென வேண்டிப்
பரவுகிறோம் நம்பக்கம் பார்ப்பாய் —
கருவமைந்த
கற்பகத்தின் கண்ணே
கலையழகுக் காப்பிதங்கள்
நற்பதமே தாராய் நமக்கு

கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை

ஐப்பசி 1989.

விலை ரூ 4-00

# கற்பகம்

ஐப்பசி

1989

மலர் — 10

இதழ் — 4

வெளியீடு :

வடமாகாண

தெ,ப. பொ. கூட்டுறவு சங்கங்களின் சமாஜம்,

330, கே,கே.எஸ் வீதி

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22713

ஆசிரியர்;

கே. வி. நடராஜன்

அச்சாளர்கள் :

உமா பிறிண்டேர்ஸ்

32, நல்லூர் குறுக்கு வீதி,

நல்லூர்.


# சிந்திப்போம்! செயலாற்றுவோம்!

நடந்தவைகளை ஒரு துர்க்கனவாக நினையுங்கள். இனி நடக்க இருப்பவற்றை எல்லோரும் ஒன்றுபட்டு நன்கு திட்டமிட்டுச் செயலாற்றுங்கள்.

இது தமிழ் மக்கள் இழந்து போன சகலவற்றுக்கும் சகல துறைகளுக்கும் ஒரு ஒளடதமான கூற்று ஆகும், ஆனாலும் இப் பொன்மொழி எமது தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மிகமிகப் பொருத்தமானதொன்றாகும்.

இப்பொன்மொழிக் கருத்தையே எமது சங்கங்களின் பாதுகாவலராக வந்திருக்கும் புதிய கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு, ரி, சபாரத்தினம் அவர்களும் கெட்டு நொந்து போயிருக்கும் எமது சங்கங்களுக்கு விஜயம் செய்து அங்கத்தவர்கள், பணியாளர்கள், சங்க நிர்வாகிகள் ஆகியோரை ஒன்று கூட்டி அவ்வொன்று கூடல் வைபவங்களில் வைத்து வலியுறுத்தி வருகின்றார்,

சமூக மேம்பாட்டை அடிநாதமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு பதினெட்டு ஆண்டுகள் எப்படியோ உருண்டோடிவிட்டன. ஆனால் இந்தப் பதினெட்டு ஆண்டுகளில் இச்சங்கங்கள் சமூகத்துக்கு என்ன செய்திருக்கின்றன? உதவி ஆணையாளர் பொறுப்பை ஏற்று செயற்படத் தொடங்கிய அண்மைக் காலத்துக்கிடையிலேயே சங்கங்களையும், சமூகத்தையும் நன்கு புரிந்துகொண்ட நிலையில் பல சந்தர்ப்பங்

களில் இவ்வாறு கேட்டுத் தமது கவலையையும் அதிருப்தியையும் வெளிப்படுத்தியிருக்கிறார் ஆணையாளர் அவர்கள்,

சில வருடங்களாக ஏற்பட்ட நாட்டு நிலைமையை – குழப்பத்தை எல்லாவற்றுக்கும் ஒரு சாட்டாகச் சொல்ல முடியாதென்பதும் ஆணையாளரின் கூற்று. கள் உற்பத்தி விற்பனையை மட்டுமே இந்த பதினெட்டு ஆண்டுகளாக இச்சங்கங்கள் மேற்கொண்டு சமூகப் பணி செய்துள்ளன. இதற்கு மேல் சிந்திக்க – செயற்பட மறந்ததும் உதவி ஆணையாளரின் வேதனையாகும்.

ஆகவே எமது புதிய உதவி ஆணையாளர் திரு. ரி. சபாரத்தினம் அவர்கள் தமது பூரண ஒத்துழைப்பையும் ஆலோசனையையும் மனப்பூர்வமாக சங்கங்களுக்கு வழங்க முன் வந்திருக்கிறார். பனை மூலவளத்தை பயன் படுத்தி புதுப்புது உத்திகளைக் கையாண்டு புதுப்புது தொழில்களை ஆரம்பித்து சங்கங்கள் நன்கு திட்டமிட்டுச் செயற்பட வேண்டும். எல்லாச் சங்கங்களும் ஒரு தொழிலைத் தான் செய்ய வேண்டுமென்பதில்லை. வெவ்வேறு தொழில்களைச் செய்யலாம்.

ஆகவே இனியும் கால தாமதம் செய்யாதீர்கள், காலக்கோளாறினாலோ அல்லது எமது கவலையீனங்களினாலோ நாம் இழந்தவைகளை சிந்தித்துக்கொண்டிருக்கலாகாது முந்திய நிர்வாகங்கள் செய்த குறைகளையே கண்டு பிடிப்பதிலேயே இன்றைய நிர்வாகிகள் காலத்தைக் கழிக்கக்கூடாது, சமூக மேம்பாட்டுச் சங்கங்களாகிய தெ. ப. பொ. கூ. அமைப்புகளும், அதன் நிர்வாகிகள், பணியாளர்கள், அங்கத்தவர்களும் தமக்குள் முரண்பட்டு நிற்பதை தவிர்த்து புதுத்தெம்புடன் சிந்தித்துச் செயலாற்ற முன்வரவேண்டுமென்பதே கற்பகத்தின் வேண்டுகோளுமாகும்.

# நவீன மயப்படுத்தப்பட்ட பனம்பொருள் உற்பத்திகள்

கற்பக தருவான பனை தமிழ் மக்களுக்குக் கிடைத்த வரப் பிரசாதமாகும். தமிழ்மக்களின் வாழ்க்கையோடு பனை தொன்றுதொட்டு ஒன்றிணைந்து விளங்குகின்றது. எமக்குத் தேவையான சகல வித பயன்பாடுகளையும் வழங்கக் கூடிய ஒரேயொரு மூலவளம் பனை வளமே யாகும். இப்பனை வளத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்தே அரசாங்கம் பனை அபிவிருத்திச் சபையை 1978-ம் ஆண்டு நிறுவியது. பனை அபிவிருத்திச்சபை உருவாக்கப்பட்ட இக்குறுகிய காலத்தில் பனம் பொருள் அபிவிருத்தி குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் கண்டுள்ளதுடன், பனம் பொருள் உற்பத்திகளும் நவீன மயப்படுத்தப்பட்டு வருகின்றன.

புதிய பனம் பொருட்களைப் பரீட்சார்த்தமாகத் தயாரிப்பதுடன், உற்பத்திக்கான பயிற்சியளித்தலும் சபையினுல் மேற்கொள்ளப்படுகின்றது. பண்டைய முறையில் பனம் பழத்திலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட தயாரிப்புக்கள் நவீன மயப்படுத்தப்பட்டும், புதிய உற்பத்திகள் அறிமுகம் செய்யப்பட்டும் வருகின்றன. முன்னர் பனம் பழக் காலங்களிலேயே பனம் பழச்சாற்றைப் பெறமுடியும் என்ற நிலை இருந்து வந்தது. தற்போது இந்த நிலை மாற்றப்பட்டு வருடம் முழுவதும் பனம் பழச்சாற்றைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகப் பனஞ்சாறு போத்தலில் அடைக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம் வருடத்தில் எக்காலத்திலும் பனம் பழச்சாற்றைப் பெறக் கூடியதாகவுள்ளது.

பனம் பழத்தில் மாத்திரமின்றிப் பதநீரிலிருந்தும் பெறப்படும் உற்பத்திகள் நவீனப்படுத்தப்பட்டுள்ளன. பதநீரிலிருந்து பனம்பாணி நவீன முறையில் தயாரிக்கப்பட்டுச் சந்தைப்படுத்தப்பட்டுள்ளது. பனை ஓலையிலான உற்பத்திப் பொருட்கள் தற்போது நவீன மயப்படுத்தப்பட்ட முறையில் தாராளமாக மக்களுக்குக் கிடைக்கின்றது. சபை நிறுவப்பட்ட பின்பு 100 க்குமதிகமான புதிய உற்பத்திப் பொருட்கள் பனையோலையிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

வருடந்தோறும் 5 லட்சம் பனம் விதைகளை நடுகை செய்ய இலங்கைப் பனை அபிவிருத்திச் சபை திட்டமிட்டுள்ளது. பனம் விதைகளை நாட்டும் முறையோடு எதிர்காலத்தில் பனங்கன்றுகளை நடுகைக்காக விநியோகம் செய்யவும் சபை திட்டமிட்டுள்ளது. பொலித்தின் உறைகளில் பனம் நாற்றுக்கள் உண்டாக்கப்பட்டு பனம் நாற்றுக்களை நடுகை செய்யும் முறை மேற்கொள்ளப்படவிருக்கின்றது. இந் நாற்று மேடை மூலம் சிறந்த பனங் கன்றுகளைப் பெற முடியும்.

# தெங்கு பனம்பொருள் உ. வி கூ.
# சங்கங்களின் முகாமைத்துவம்

ஒரு நிறுவனம், அதாவது ஒரு அரச நிறுவனமாக இருந்தாலென்ன, தனியார் நிறுவனமாக இருந்தாலென்ன கூட்டுறவு அமைப்பாக இருந்தாலென்ன ஒரு நோக்கம், இலக்கு என்பவற்றை மையப்படுத்தியே அமைக்கப்படுகின்றது, இந்த வகையில் நோக்கும் போது தனியார் அமைப்புக்கள் தனி நபர் ஆதாயங்களை நோக்கமாகவும், அரச நிறுவனங்கள் அரசின் செயற் திட்டங்களை வெளிப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை நகர்த்துவதனை நோக்கமாகவும், கூட்டுறவு அமைப்பானது அதனது அங்கத்தவர்களதும் அவர்களைப் பின்னிப் பிணைந்து இருப்பவர்களையும் உள்ளடக்கியதான ஆதாயங்களையும் நோக்கமாகக் கொண்டு ஸ்தாபிக்கப்படுகின்றது. இவ்வாறான அடிப்படை நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்கு முகாமையின் செயற்பாடானது மிகவும் இன்றியமையாத தொன்றாக அமைகின்றது. அதாவது குறித்த நோக்கினை எய்துவதற்காக செயற்திட்டங்களைத் தீட்டி அதனைக் கட்டுப்படுத்தி, வழிநடத்திச் சென்று குறித்த இலக்கை எய்துதல் முகாமையின் செயற்பாடாக விளங்குகின்றது. இவ்வாறான முக்கியத்தை உடைய முகாமையானது சரியான முறையில் அமைந்திருக்காத விடத்து நிச்சயமாக குறித்த இலக்கினை அல்லது எதிர்பார்த்த விளைவைப் பெறுதல் என்பது கேள்விக்குரிய ஒன்றாகின்றது.

**இ. குணரத்தினம்**

தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம், மல்லாகம்.

இந்த வகையிலே தெங்கு பனம் பொருள் உ. வி. கூ. சங்கங்களினதும் அதன் துணை அமைப்புக்களினதும் முகாமை பற்றி ஆராய்வதும் அது ஒரு திறமை மிக்க சபையாக அமையவேண்டியதன் அவசியம்பற்றி எடுத்துரைப்பதும் இவ்வேளையில் மிகவும் பொருத்தமுடையதாக அமையும்.

தெங்கு பனம் பொருள் உ, வி. கூ. சங்கங்களையும் அதன் துணை அமைப்புக்களையும் பொறுத்த வரையில் அது ஒரு உற்பத்தி சார்ந்த நிறுவனம்

என்பதுடன் பொருளாதார ஆதாயங்களுடன் அது அதன் அங்கத்தவர்களுக்கு சேவையினையும் வழங்க வேண்டியதும் அதன் நோக்கமாகும். ஆரம்பத்திலே இந்தச்சங்கங்கள் அமைக்கப்படும் போது இதன் மூலம் பின்வரும் முக்கிய நோக்கங்களை அடைய முடியும் என எதிர்பார்க்கப்பட்டது.

(அ) சீவல் தொழிலாளர்களது பொருளாதார தேவைகளை நிறைவு செய்தல்.

(ஆ) சமூக ஈடேற்றத்திற்கு இச் சங்கங்கள் ஒரு வழிகாட்டியாகவும் தலைமை அமைப்பாகவும் அமையும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நோக்கங்களை நாம் விரிவாக நோக்குமிடத்து இந்தச் சங்கங்களை உறுப்புரிமைப் படுத்தும் சீவல் தொழிலாளர்களும் அவர்களைச் சார்ந்து வாழ்பவர்களும் மிகவும் பின்தங்கி அவர்களது அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவு செய்ய முடியாத நிலையில் காலங்காலமாக பல்வேறு ஒடுக்கு முறைகளுக்கு உட்பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு பிரிவினரை பொருளாதார ரீதியாக வளப்படுத்தி அவர்களை ஒடுக்கு முறைகளிலிருந்து மீளவைப்பது என்பதாகும். அத்துடன் வளர்ந்துவரும் நாகரீக உலகில் அவர்களை அறிவுள்ளவர்களாகவும் தங்களைத்தாமே உணர்ந்து வழிநடத்திச் செல்லக் கூடியவர்களாகவும் தாமாகவே தமது பிரச்சனைகளுக்கு தீர்வினைக் காணக் கூடிய ஆற்றல் மிக்கவர்களாகவும் ஆக்குவதும் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கமாகும். அத்துடன் ஆங்காங்கே தெட்டம் தெட்டமாக வாழும் சீவல் தொழிலாளர்களை ஒரு ஸ்தாபனமயப்படுத்துவதுடன், நிர்வாக அறிவுகளைப்பெற்ற நிர்வாகிகளாகவும் ஆக்குவதும் இவற்றின் குறிக்கோள்களில் முக்கியமானவை என்பதனைக் கருத்தில் கொள்ளுதல் அவசியமாகின்றது.

தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கங்கள் இவ்வாறான பாரிய இலக்கினை அடைவதற்கு அது தனது உற்பத்தி நடவடிக்கைகளை சீராகவும் திட்ட மிட்டும், ஒழுங்குக்கு உட்பட்டதாகவும் நகர்த்துதல் அவசியம். இதனைச் செய்வதற்கு முகாமைச் செயற்பாடு சிறந்ததாக அமைதல் வேண்டும். ஒரு முகாமையின் செயற்பாட்டைப் பொறுத்த வரையில் திட்டமிடல், அமைத்தல் செயற்படுத்தல், கண்காணித்துக் கட்டுப்படுத்தல் ஆகிய செயற்பாடுகளைக் கொண்டுள்ளது. இச் செயற்பாடுகளைமுகாமை பூர்த்தி செய்யாத பட்சத்தில் அது தனது குறித்த நோக்கினை அடைதல் இயலாது.

இந்தப் பின்னணியில் தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கங்கள் இன்று பதினேழு ஆண்டை அண்

மித்த போதிலும் அவை தமது அடிப்படை நோக்கங்களை எந்த அளவிற்குப் பூர்த்தி செய்திருக்கின்றன என்பது பற்றி பார்த்தலும் கடந்த கால ஓட்டத்தை மீட்டுப் பார்த்தலும் அவசியமானதாகும். பனைத் தொழிலாளர்கள் அதாவது சீவல் தொழிலாளர்களும் ஏனைய பனைத் தொழிலில் ஈடுபட்டவர்களும் அவர்தம் பொருளாதார தேவைகளும் எவ்வாறு பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன என்பதனை நாம் ஆராயுமிடத்து 100 க்கு 10% தொழிலாளர்களாயினும் முழுமையாக பொருளாதார ரீதியாக வளம் பெற்று இருக்கின்றார்களா என்பது இன்னமும் சந்தேகமே. சங்கம் ஆரம்பித்த காலத்தில் எவ்வாறு ஓலைக் குடிசைகளில் பனை அடிவாரங்களில் தொழிலாளர் வாழ்ந்து வந்தார்களோ அந்நிலையில் இன்னமும் பெரிய மாறுதல்கள் ஏற்படவில்லை. வருடாவருடம் ஏற்படும் பருவகாலப் பிரச்சனைகளால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டு வரும் நிலை இப்போதும் பல இடங்களில் உள்ளது. இதனுல் அவர்கள் வருவாயை மிகவும் குறைவாகப் பெறும் நிலையையும் அவதானிக்கலாம். தம்முடைய அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்யமுடியாத வகையில் வருமானம் பெற முடியாத நிலையில் இன்னமும் பல சங்க அங்கத்தவர்கள் இருப்பதனைக் காணலாம். குறிப்பாக இச் சங்கங்கள் வெறும் தரகர்கள் போல் அங்கத்தவர்களிடம் கள்ளைக் கொள்வனவு செய்து ஆதாயம் வைத்து அதனைப் பாவனையாளர்களுக்கு விற்பனைசெய்யும் ஒருநிலையிலேயே உள்ளதனைக் காணக் கூடியதாக உள்ளது. பல்வேறு வகையான பனை வளத்தைப் பயன்படுத்தி அங்கத்தவர்களது வருவாயை அதிகரிக்கத்தக்க செயற்திட்டங்களைப் பயன் தரத்தக்க வகையில் மேற்கொண்டுள்ளனவா என்றுல் அது கேள்விக்குரியதாகும். தற்போதய நாட்டு நிலைமையில் மதுசார உற்பத்தி சங்கங்களுக்கு ஓரளவு சாதகமாக அமைந்த தெனலாம். இல்லையென்றுல் பல சங்கங்கள் அனேகமாக மூடுவிழாவைக் கண்டிருக்கும்.

சமூக மறுமலர்ச்சிக்கு இந்தச் சங்கங்கள் எவ்வாறு உதவி செய்கின்றன என்பது பற்றியும் பார்த்தல் அவசியம். வீடுகளில் கள்ளை வைத்து விற்பதன் மூலம் ஏற்படக் கூடிய சமூக சீர்கேடுகளை அகற்றுவதற்காக இந்தச்சங்கங்கள் அமைக்கப்பட்டதாக ஆரம்பத்தில் பிரச்சாரம் செய்யப்பட்டது. அது முற்று முழுதாக உண்மையாக இருந்த போதிலும் இன்றைய நிலையில் பெரும்பாலான தொழிலாளர்கள் தமது உற்பத்திப் பொருளான கள்ளை இன்னமும் வீட்டில் வைத்தே விற்பனை செய்து வருகின்றுர்கள். மரவரி காலத்தில் எவ்வாறு கள்ளை வீட்டில் வைத்து

விற்பனை செய்தார்களோ அதே நிலையிலேயே பெரும்பான்மை யான இடங்களில் தற்போதும் நடைபெறுகின்றது. இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட சமூக ஈடேற்றம் என்பது கேள்விக்குரிய தொன்றுகின்றது.

ஆகவே சங்கங்கள் தமது நோக்கங்களை முழுமையாக நிறைவேற்ற முடியாமைக்கு அடிப்படைக்காரணம் ஒரு சிறந்த முகாமைச் சபை இந்தச் சங்கங்களில் அமையக் கூடிய வாய்ப்பு இல்லாதிருப்பதே. தனிநபர் ஆளுமைகள் மூலம் சில சங்கங்கள் சில காலங்களில் வளர்ச்சியடைவதும் வீழ்ச்சியடைவதுமாக இருப்பதனை நாம் எமது நடைமுறை அனுபவங்களில் காண முடியும். எனவேதான் ஒரு சிறந்த முகாமைச்சபை சங்கங்களுக்கு அவசியமாகும். சமூகத்திலுள்ள பல்வேறு பட்ட சேவை நோக்கம் சமுதாய நோக்கம் என்பவற்றைக் கொண்ட அறிவாளிகள், புத்திஜீவிகள் தொழில் வல்லுனர்கள், கல்விமான்கள் என்பவர்கள் இணைந்த ஒரு முகாமைச் சபை இச் சங்கங்களுக்கு அவசியமாகும். இப்படியான ஒரு சபை அமைவதில் பல வேறுபட்ட பிரச்சனைகளை எதிர்நோக்கலாம். தற்போதைய அமைப்பு முறை அதற்கு இடமளிக்காது கூடப்போகலாம். இருப்பினும் நோக்கங்களை நிறைவுசெய்யாமல் அமைப்புகள் சிதைந்து போவதைவிட நோக்கங்களை நிறைவு செய்வதற்காக தற்போதய அமைப்பில் மாற்றங்கள் செய்தல் புத்திசாலித்தனமானது. அதாவது கூட்டுறவு அமைப்பில் இவ்வாறான ஒரு சபை அமைக்கப்படுவது சட்டரீதியாக சாத்திய மற்றதாக இருக்கலாம், அப்படி இருப்பின் அதற்கு அமைய சங்கங்களின் உபவிதி திருத்தியமைக்கப்பட்டு அதற்கு வழிசெய்யப்பட வேண்டும். ஒரு காலகட்டத்தில் சமூகத்தில் உள்ள கல்விமான்கள், சமூக சேவை நோக்கம் கொண்டோர் நிர்வாக சபையில் பங்கு பற்றி இயங்கக் கூடிய ஒரு நிலை இருந்ததை எவரும் மறந்திருக்க முடியாது. ஆனால் தற்போது அந் நிலை இல்லாது போய் விட்டது, மீண்டும் அந் நிலைவரவேண்டும். அப்போதுதான் சங்கங்களுக்கு சிறந்த எதிர்காலம் ஏற்பட வழியுண்டு.

ஏனைய கூட்டுறவு அமைப்புக்களுடன் ஒப்பிட்டு எமது சங்கங்களை நாம்பார்க்கமுடியாது. ஏனெனில் அச்சங்கங்களில் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட முகாமைச்சபை பணியாளர்களையும் உட்படுத்தி அமைக்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி தொழில் ரீதியிலான அங்கத்துவம் அல்லது பல்வேறு பட்ட மக்களையும் உள்ளடக்கிய தான அங்கத்துவம் அச்சங்கங்களில் உள்ளது. எனவே இச்சபையில் ஓரளவுக்கு சிறந்த முகாமைச் சபையை எதிர்பார்க்க முடியும். ஆனால் எமது சங்கங்களில் இந்

நிலை ஏற்படவாய்ப்பில்லை. இயக்குனர் சபையில் இடம் பெறும் உறுப்பினர்களின் தன்மை அவர்களின் ஆற்றல் என்பவற்றிலேயே எமது சங்கங்களின் செயற்பாடு தங்கியுள்ளது. எனவே எமது சங்கங்களில் முகாமைச் சபை ஒரு இயங்கியல் ரீதியாக' இயங்கக் கூடியதாக அதாவது பெயரளவுக்கு அதிகாரம் கொண்டசபையாக இருக்காது. நடைமுறையில் இயங்கக் கூடிய சாத்தியமான ஒரு சபையாக இதனை திருத்தியமைத்தல் வேண்டும். அப்படி அமைக்கப்படும் பட்சத்தில்தான் சங்கங்கள் சிறப்பாக இயங்கி குறித்த நோக்கினை அடையமுடியும். இதற்காக பனை அபிவிருத்தியில் அக்கறை உள்ளவர்களும் பனை வளத்தை நம்பி வாழ்பவர்களும், சமூகப்பற்றும் சேவை மனப்பான்மையும் உடையவர்களும் சேர்ந்து உழைத்தல் வேண்டும்.

---

# தெரிந்துகொள்ளுங்கள்

| | |
|---|---|
| இரு கண் | — ஊனக் கண், ஞானக் கண் |
| முக்கனி | — வாழைப்பழம், பலாப்பழம் மாம்பழம். |
| முச்செயல் | — படைத்தல், காத்தல், அழித்தல். |
| முப்பொறி | — மனம், வாக்கு, காயம். |
| முப்பொழுது | — காலை, உச்சி, மாலை. |
| நால்வகைப் பூ | — கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ. |
| நால்வகை அரண் | — காடு, மலை, நீர், மதில். |
| நால்வகை யாழ் | — பேரி யாழ், மகர யாழ், சகோட யாழ், செங் கோட்டி யாழ். |
| நால்வகை புண்ணியம் | — தானம், கல்வி, தவம், ஒழுக்கம், |

வளரும் எழுத்தாளர்,

# துயிலின் பரிசு

செல்வி ஜெயந்தி

**டொக் டொக் டொக்....................டொக் டொக் டொக்**

"அடடா இது என்ன வீடே இடிந்து விழுமாப் போல் இருக்கே! அல்லது நான் கனவு தான் காண்கிறேனு?"!

"ரகு! ரகு!" கூடவே என் பெயரைக் கூப்பிடும் சத்தமும் கேட்டுத் திடுக்குற்று விழித்து எழுகிறேன். குழந்தை வீரிட்டு அழுது களைத்ததாலோ என்னவோ குரல் அடைத்து கேவிய குரலில் அழுது கொண்டே இருந்தது. அழும் குழந்தையைத் தூக்குவதா அல்லது இடிமுழக்கம் போலத் தட்டப்படும் கதவை திறப்பதா! ஒரு நிமிடம் சிந்தித்த நான் குழந்தையைத்தூக்கிக் கொண்டே குறட்டை விடும் நளினியை நோக்கினேன். அவள் இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தாள்,

ரி. வி. பார்த்து விட்டு படுத்ததினுல் அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்த எங்களின் உறக்கத்தைக் கலைத்த பிரகிருதி யாரென அறிய கதவைத் திறந்தேன். அங்கு கனகர் அம்மான் உச்சந்தலை தொட்டுப் பாதம் வரை போர்வையால் போர்த்தபடி முகம்மட்டும் தெரிய நின்ருர்.

"இந்த நேரத்தில் இவர் ஏன் இங்கு வந்தார்?". நான் சிந்திப்பதற்கிடையில் —

"ஏன்டா மேனை, இந்தப் பச்சமண் எவ்வளவு நேரமா கதறுது. நீங்க இரண்டு பேரும் இதுக்குள்ளைதானே கிடக்கிறியள்? இதின்ர சத்தம் கேட்க இல்லையோ?"

அப்போது தான் எனக்கு உண்மை தெரியலாயிற்று, குழந்தை வெகு நேரமாய் அழுத சத்தம் கேட்டுத்தான் கனகர் அம்மான் வந்திருக்கிருர் என்பது.

"சே சே, அப்படி ஒன்றும் இருக்காதம்மான். அவ்வளவுக்கு நாங்கள் உறங்கிவிட்டமா என்ன" முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் முயற்சி,

"முதல்ல பிள்ளை ஏன் அழுகுது என்று பார்! நீ எழும்பி இவ்வளவு நேரமாகுது வளைஞ்சு நெளிஞ்சு அழும் அதைப் பாக்காம அழ யில்லை என்று சொல்லிக்கொண்டு நிற்கிருயே" கனகர் அம்மான் சீறினர்

''நளினி! ஏய் நளினி!'' திடுக்குற்று எழுந்த நளினி மிலாந்தியபடி எழுந்து நின்ருள். தூக்கக் கலக்கம் இன்னும் அவளிடம் இருந்து விடை பெறவில்லை.

இருவரும் லைற் வெளிச்சத்தில் குழந்தையைப் பார்த்தோம் மேலெல்லாம் தடித்திருந்தது. மயிர் கொட்டியின் மயிர் பிள்ளையின் மேலில் இருப்பது தெரிந்தது. அதனை நீக்குவதற்கு நல்லெண்ணெப் போத்திலை எடுக்க ஓடிஞள். அவதியாக போத்தலை எடுத்தபோது தூக்கக் கலக்கத்துடன் கூடிய அத்தடியில் போத்தலை தவறவிட்ட நளினி ஏங்கிப்போய் நின்ருள்.

நிலத்தில் வழிந்த எண்ணெயை தொட்டு குழந்தையின் மேல் இருந்த தழும்புகளில் தடவி மயிரை நீக்கியதும் அழுத களைப்பில் குழந்தை அயர்ந்து தூங்கத் தொடங்கியது.

எங்கள் அமளியில் நான் கனகரப்புவை மறந்தேபோனேன்

தொண்டையை செருமிய கனகரப்பு ''ஏன்ராமேனை மயிர் கொட்டிப்புழு விழுந்திருந்தா உந்த துணிமணியை உதறிப்பாரன் கிடக்கும்'' என்ருர். படுக்கையை தட்ட வேண்டும் என்ற நினைவில் லாமல் நின்ற எங்களை அப்புவின் வார்த்தை செயற்படவைத்தது,

குழந்தையை போர்த்த துணியை கைகளில் எடுத்த நான் திடுக்குற்றேன். அத்துணியின் ஒரு பகுதியில் மயிர் கொட்டியான் கிடந்தது.

ரீ. வி, பார்த்திட்டு வந்து தூக்கக் கலக்கத்தில் அவதானமில் லாமல் படுக்கையை விரித்தது எனக்குப் புரிந்தது.

''நல்லகாலம் மசுக்குட்டி என்றபடியால் இந்தளவோட போச்சு. வேற ஏதும் விசப் பிராணி என்ருல் இந்தப் பிள்ளையின் நிலையென்னவாயிருக்கும். உங்கடை ரீ. வி. பார்ப்பும் கண்டறியாத எடுபாடும்'' கனகரப்புவிற்கு வந்த ஆத்திரம் அவர் பேச்சில் அவ் வளவிற்கு சூடேறி இருந்தது. ஒமோம், இந்தக்காலத்துப் பெட்டையள் கலியாணம் கட்டி பிள்ளைப் பெத்துப் போட்டும் கவுண் சட்டையெல்லே போட்டுக் கொண்டு திரியிருளுகள். பெத்த பிள்ளை எக்கெதியாவது கெட்டுப்போகட்டும் நீங்கள் ரீ. வி. யைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டு கொஞ்சுங்கோ.

''நான் போயிற்றுவாறன்'' என்றுசொன்னவர் ரோச்சை எடுத் துக்கொண்டு என்னையும் நளினியையும் பார்த்தபார்வை அந்தப்பார்வை யில் தொக்கி நின்றது கோபமா, கேலியா, அசூசையா எதுவென்று இன்னும் என்ஞல் புரிந்து கொள்ள முடியவில்லை,

அம்மான் சொன்ன கடைசி வார்த்தைகள் என் செகிட்டை பொத்தி அறைந்தற்குச் சமமாகும்.

நளினி தலை கவிழ்ந்து நின்ருள்.

# சங்கச் செய்திகள்

"சங்கங்கள் சமூகத்திற்கு நல்வழி காட்டவேண்டும்."

**உதவி ஆணையாளர் திரு. ரி. சபாரத்தினம் அவர்கள்**

தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கையில் அங்கத்தவர்கள் இன்று அதிருப்தி அடைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. இந்த நிலை ஏன் ஏற்பட்டது? நாட்டு நிலைமையை மட்டும் முற்று முழுதான சாட்டுதலாகச் சொல்லிவிட முடியாது. ஆகவே அங்கத்தவர்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள விரத்தியையும், அதிருப்தியையும் போக்க சங்கங்கள் உடன் செயலில் இறங்க வேண்டும்.

இவ்வாறு 27-9-89 ல் கோண்டாவில் தெ. ப. பொ கூ. சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகையில் கூ. ஆ, உதவி ஆணையாளர் திரு. ரி. சபாரத்தினம் தெரிவித்தார்.

உதவி ஆணையாளர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

அங்கத்தவர்களேச ங்கத்தின் முதுகெலும்பு. அவர்களின் ஒத்துழைப்பின்றி சங்கத்தை வழிநடாத்த முடியாது, கடந்த காலங்களை மறந்து எல்லோரும் ஒன்றுபட்டு சங்கங்களைக் கட்டி எழுப்ப வேண்டும். கள் உற்பத்தி விற்பனையில் மட்டும் சங்கங்களும், அங்கத்தவர்களும் கவனம் செலுத்தக் கூடாது. பனையின் வளத்தைக் கொண்டு மாற்றுத் தொழில்களிலும் ஈடுபட வேண்டும், மது ஒழிப்பு போன்ற சுலோகங்களும் சட்டங்களும் இயற்றப்பட்டால் சங்கங்களின் நிலை என்னுவது? எதுகும் வராதென்று நினைக்கக் கூடாது. வருமுன் திட்டமிட்டு மாற்றுத்தொழில்களை உண்டாக்கி எமது சந்ததியினருக்கு நல்ல வழி காட்ட வேண்டும். மிக விரைவில் கூட்டுறவுக் கல்வி, (முதியோர் கல்வி) ஆகிய முன்னேற்ற

செயல்களை கூடிய விரைவில் சங்கங்கள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்,

சங்கத் தலைவர் திரு. இ. செல்வரத்தினம் தலைமை வகித்துப் பேசுகையில், நாட்டில் நடந்து முடிந்த அசம்பாவிதங்களாலும் வன்செயல்களினாலும் சூறையாடப்பட்ட சங்கங்களில் எமது சங்கமும் குறிப்பிடக் கூடியதாகும். மிச்ச சொச்சம் என்பதற்கு இடமில்லாமலே இச்சங்கமும் சூறையாடப்பட்டதை சகலரும் அறிவர், அங்கத்தவர் சோர்வடைந்திருந்த அவ்வேளையில் தனிப்பட்ட சிலரின் முன் முயற்சியினால் சிறு தொகை பணத்தை அங்கத்தவருக்கு வழங்கி உற்சாகப் படுத்தியதன் மூலம் மீண்டும் சங்கத்தை கட்டி எழுப்ப முடிந்தது, இக் கூட்டுறவு அமைப்பு முறையிலான சங்கங்களினால் தான் சமூகம் வளர்ச்சி காண முடியும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

★

## கூட்டுறவுச் சங்கங்களின்
## நுகர்ச்சிச் சமாசம்

யாழ் மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றிணைந்து நுகர்ச்சியாளர் சமாசத்தை நிறுவியுள்ளன. திரு. சி. சிவமகாராசாவைத் தலைவராகக் கொண்ட இச் சமாசத்தைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

★

## யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் தலைவராக திரு, சி. சிவமகாராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார். முன்பு ஸ்ரீலங்கா தேசிய கூட்

டுறவுச் சபை என்ற அமைப்பின் கீழ் மாவட்டங்கள் தோறும் மாவட்டக் குழுக்கள் இயங்கி வந்தன.

கூட்டுறவு இயக்கத்தில் செய்யப்பட்டுள்ள மாற்றங்களினுல் மாவட்டங்களில் மாவட்ட கூட்டுறவுச்சபைகள் நிறுவப்பட்டுள்ளன. இச்சபைகள் மாவட்டங்களில் கூட்டுறவு வளர்ச்சி சம்பந்தமான திட்டங்களைத் தாமே தீர்மானிப்பதற்கு முன்பைவிட கூடிய அதிகாரங்களையுடையவையாகத் தனித்து இயங்கும்.

★

## தெ. ப. பொ. கூ. சங்கங்கள்

# சமூக மறுமலர்ச்சிக்கு எதுவும் செய்யவில்லை

## கூ. ஆ. உ. ஆணையாளர், திரு. ரி. சபாரத்தினம் அவர்களின் விசனம்

தென்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் அடிப்படை நோக்கங்களான சமூக பொருளாதார கல்வி கலை கலாசாரத்துறைகளில் இத்தொழில் சார்ந்த மக்களை எந்த அளவிற்கு முன்னேற்றம் காணச் செய்திருக்கின்றன? அல்லது எதிர்காலத்திலாவது அதற்குரிய நம்பிக்கையைத் தானும் ஏற்படுத்தி வைத்திருக்கின்றனவா என்றுல் கூட இல்லை என்றே சொல்ல வேண்டும். அந்தளவுக்கு இன்றும் இச் சங்கங்கள் வளர்ச்சி பெருமல் ஆரம்ப நிலையிலே இருப்பதாகத்தான் கருத வேண்டி உள்ளது.

இவ்வாறு அண்மையில் இடம் பெற்ற மாதாந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசுகையில் கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் (பனம்பொருள்) திரு, ரி. சபாரத்தினம் அவர்கள் கவலை தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது;-

நான் வெளிமாவட்டங்களில் கடமையாற்றிய வேளை களிலும் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கும் அவற்றின் மூலம் எமது பிரதேச பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்த வேண்டுமென்ற எண்ணக் கருத்தையும் பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவரும் சமாச செயலாளருமான திரு. நடராசா அவர்களிடம் பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் கூறியுள்ளேன்.

இச்சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டதன் நோக்கம் இலாபத்தை மட்டும் காட்டுவதற்காகவல்ல. இத்தொழிலாள மக்கள் பட்ட இன்னல்களைத் துடைத்தெறிந்து அவர்களை சகல துறைகளிலும் விழிப்படையவும், மேம்படுத்தவும் என்பதே உண்மையாகும்.

ஆகவே இது காலவரையும் நான் வெளியிலிருந்து கூறியவற்றையும் கண்ட கனவையும் நனவாக்க இன்று சந்தர்ப்பம் கிடைத்துள்ளதையிட்டு உண்மையில் பூரிப்படைகிறேன். ன்று உங்களுடன் கூட இருந்து உங்களில் ஒருவனுக செயற்பட வந்துள்ளேன். இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி புதுப்புது உத்திகளைக் கையாண்டு இச்சங்கங்களின் நோக்கையும், இலக்கையும் வென்றடைய உங்கள் ஒவ்வொருவருடைய ஒத்துழைப்பும் இன்றியமையாததாகும்.

★

அச்சு வேலையென்றதும் நினைவிலிருத்திக்
கொள்ளவேண்டிய பெயர்

**உமா**

**உமா பிறிண்ட்டேர்ஸ்**

32, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர்.

# இப்படி ஒரு வாழ்க்கை தேவையா?

வனஜா ஒரு சூட்கேசுக்குள் தனது சேலை சட்டைகளையும் இன்னும் தேவையான சில பொருட்களையும் அவசர அவசரமாக எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். அப்போது அறைக் கதவு தட்டப்பட்டதுடன் ''வனஜா,! வனஜா! வேலைக்குப் போக நேரமாகல்லையா? கதவைச் சாத்திட்டு என்ன செய்யிறாய்?'' என்று அவளுடைய அம்மா கேட்பது காதில் விழுந்தது. அவள் சூட்கேசை மறைவாக வைத்து விட்டுக் கதவைத் திறந்தாள்.

''வனஜா என்ன செய்து கொண்டிருக்கிறாய்? வேலைக்கு தினமும் பறந்தடிச்சுக் கொண்டு கிளம்பிற நீ உடம்புக்கு ஏதும் சரியில்லையே'' என்று கேட்டுக் கொண்டே அவளுடைய நெற்றியில் கையை வைத்துப் பார்க்கலானாள் அம்மா ''அதெல்லாம் ஒண்ணுமில்லையம்மா''; என்றவள் அம்மாவின் கையை விலக்கியவாறு கிணற்றடிப் பக்கம் சென்றாள்.

வனஜாவின் தம்பி திலீப்பும், தங்கை அனுஜாவும் பாடசாலைக்குப்போக குளித்துவிட்டு சாப்பிட வந்தனர். அம்மா மூன்று தட்டுக்களை முன்னதாகவே வைத்து விட்டாள். அப்போது அப்பா செருமும் சத்தம் கேட்டது. இன்றைக்கு வனஜா உன்னுடைய பிறந்த நாளல்லவா! அதுக்காக பாயாசம் வைச்சிருக்கேன். வருஷாவருஷம் உனக்கு புதிய உடுப்பு தைத்துத் தாறனன் இம்முறை வசதியில்லை வனஜா'' என்றதும் வனஜாவின் கண்கள் லேசாகக் கலங்கின. அத்தோடு அடுத்த பிறந்த நாள் புகுந்த வீட்டில் கொண்டாடப் போவதான நினைப்பும் கூடவே வந்தது.

மா. நந்தினி
நாவலடி. அரியாலை,

வனஜா காலைச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு அறையில் வந்து உட்கார்ந்தாள் அவள் புறப்படுவதற்கு இன்னும் அரை பணி நேரம் தான் உள்ளது திலீப்டம் அனுஜாவும் செருப்பு மாட்டிக் கொண்டு கிளம்பும் சத்தம் கேட்டது, வனஜா கவலையுடன் சூட்கேசைப்பார்த்தாள்

''வனஜா'' என்று கூப்பிட்டுக்கொண்டே வந்தாள் அம்மா இன்றைக்கு நீ வேலைவிட்டு வரும் போது அப்பாவுக்கு ஒரு சறம் எடுத்துக் கொண்டுவா. அவர் மாறி உடுக்க ஒரு சறம் தானே வைத்திருக்கிறார் என்றாள்.இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் வனஜா கண்ணாடியைப் பார்த்து முகபாவத்தை மறைத்துக்கொண்டு ''உம், உம்'' என்று முனகினாள். ஆனால் அவளை அறியாமலே கண்கள் சிவந்து கலங்கின. கலங்கிய முகத் தோற்றத்தை மறைக்க அவள் அவசரமாகப் பவுடரை கையில் கொட்டி முகத்தில் பூசத் தொடங்கினாள். அம்மா திரும்பி வந்தபோது கையில் கூடை இருந்தது நல்லவேளை சந்தைக்குப் போகப் புறப்பட்டு விட்டாள் என்பது தெரிந்தது. அவள் எதிரில் சூட்கேசை எப்படி வெளியே கொண்டு போவது என்று தவித்துக் கொண்டிருந்தவளுக்கு இனி தடையில்லை. வனஜா மனதுக்குள் அம்மாவுக்கு நன்றி செலுத்தினாள்.

''வனஜா இன்றைக்கு அந்தப் புதுப் புடைவையைக் கட்டிறியா?'' என்று அம்மா கேட்டதுதான் தாமதம் அவசர அவசரமாக புதுச் சாறியைக் கட்டிக்கொண்டு, அம்மா நான் பிறந்த நாளென்று சொன்னியே ஆசிர் வதியுங்கம்மா'' என்று காலில் விழுந்தாள். அம்மாவின் கண்கள் கலங்கிய மாதிரி வனஜாவுக்கு ஒரு கணம் தோன்றியது. சிறிது நேரத்தில் சமாளித்துக் கொண்டவளாய் சந்தைக்குக் கிளம்பினாள் அம்மா.

அவள் தலை மறைந்ததும் வனஜா வேகமாகச் செயல் பட்டாள். சூட்கேசை வாசற்புறமாக வைத்தாள். அப்பா குளித்து விட்டு வருவதற்கு முன் தெருவுக்குப்போய்விடவேண்டும் என்ற அவசரத்தில் விரைந்து சென்றாள் இரண்டு தெருக்கள் கடந்ததும் தான் அப்பாடா. என்று மூச்சு வந்தது. இன்று வேலைக்குப் போக வேண்டியதில்லை. நான்கு நாட்களுக்கு லீவு கேட்டு அனுமதி கிடைத்து விட்டது.

இப்போது நேரே கோயிலுக்குப் போக வேண்டும். அங்கே அவளுடைய அத்தான் தினேசும், அத்தை, மாமா எல்லோரும். அவள் வரவை ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருப்பார்கள். நாளைக் காலை அவளுக்கும் தினேசுக்கும் கலியாணம். நாளை இன்னேரம் கல்யாணம் முடிந்திருக்கும்.

வனஜாவின் மனம் அலைபாய பஸ் வரும் திசையை அவசரமாகப் பார்த்தாள். திடீரென்று விழிகள் தெறித்து விட்டதுபோல அவ்வளவு அதிர்ச்சி எதிரில் வந்து நின்ற உருவத்தைப் பார்த்து விழித்தாள்,

''அம்மா''

அம்மா தான்! ஏன் பயந்து விட்டாய்?'' வனஜா சங்கடத்துடன் தலைகுனிந்தாள். அவளையும் அவள் கையிலிருந்த சூட்கேசையும் மாறி மாறிப் பார்த்தாள் அம்மா.

''வனஜா! நீ எங்கேபோறே, எதுக்காகப் போறே என்ற சங்கதி எல்லாம் எனக்குத் தெரியும். எப்பிடி எனக்குக் கூட' மறைக்க நினைச்சிருப்பாய்?'' நான் உன் அம்மாடி. நீ நினைக்கிறதும் நடக்கிறதும் எனக்கு தெரியாமல் போகுமா? உனக்கு எதிராய் நான் வற்புறுத்துவேனா நீயும் தினேசும் ஒருத்தருக்கு ஒருத்தரெண்டு தீர்மானம் செய்த பிறகு ஆயிரம் பேர் எதிர்த்தாலும் கூட அதிலிருந்து உங்களைப் பிரிக்க முடியாது,

உங்கப்பாவுக்கு தினேஷ் அக்கா மகன். நான் இப்பவே சம்மதம் தாறேண்டி இப்பவே புறப்படு'' என்றாள். வனஜா உதட்டைக் கடித்துக் கொண்டு விம்மலை அடக்கிநின்றாள். வீடாய் இருந்திருந்தால் வனஜா கத்திக் கதறி அழுதிருப்பாள்.

'சரி நீ கிளம்பு, அங்கே எல்லாரும் காத்திட்டிருப்பார்கள். நாளைக்குக் கலியாணம் முடிஞ்சு இரண்டு பேரும் வந்து அப்பாட்டை ஆசிர்வாதத்தை வாங்குங்கோ'' என்றாள் அம்மா.

வனஜா அப்போது அங்கு வந்த ஆட்டோ ஒன்றை கை தட்டி நிறுத்தினாள். அம்மாவிடம் தன்சூட்கேசைக் கொடுத்து விட்டு ஆட்டோவில் ஏறியவள், 'அம்மா நான் வேலைக்குப் போறன்'' நீயும் அப்பாவும் வராமே என் கல்யாணம் நடக்காது. அப்பா தன்ரை திமிரை விட்டு எப்ப கலியாணம் பண்ணி வைக்கிறரோ அன்று வரைக்கும் காத்திருப்போம்.''

தட தடவென்று செல்லும் ஆட்டோவை பார்த்துக் கொண்டே கையில் சூட்கேசுடன் கண்கலங்கி சொரிய நின்றாள் அவள் அம்மா.

★

## சங்கங்கள் தமது நோக்கினை அடைய முடியாததற்கான சில காரணிகள்

ரி. சபாரத்தினம்
கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் (பனம்பொருள்) யாழ்ப்பாணம்.

தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு பதினெட்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன. ஆனாலும் அவை ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கத்தை இன்று வரை அடையாமல் இருப்பது துரதிஷ்டமானதே. இதற்கான காரணங்கள் பலவற்றை இச்சங்கங்களிற்கு நான் நேரில் சென்று பார்த்தபோது பல குறைபாடுகளைக் காணக்கூடியதாக இருந்தது, அக்குறைபாடுகளை நீக்கி, எதிர்காலத்திலாவது இச்சங்கங்கள் மூலமாக நிறைவேற்றப்பட வேண்டிய அடிப்படை இலட்சிய நோக்கினை விரைந்து அடைய வேண்டுமென்பதே எனது பேரவாவாகும். அந்த நல்ல நோக்கம் வேண்டி சங்கங்களுடன் நேரடியாகவும் மிகமிக நெருக்கமாகவும் தொடர்புள்ளவர்களான சங்கப் பணியாளர்கள், நிர்வாகிகள், அங்கத்தவர்கள் ஆகியோருக்கு பொதுவான சில தரவுகளைத் தர விரும்பி எழுதுவதே இச்சிறு ஆக்கமாகும்,

### 1. வரவு செலவுத் திட்டம்

ஒரு நிறுவனம் எதிர்காலத்தை திட்டமிட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மூலம் நிறுவனத்தின் நிதிக் கட்டுப்பாட்டினைபேண முடிகின்றது. எனவே இச் சங்கங்கள் எதிர் கால நடவடிக்கைக்காக ஓர் வரவு செலவுத் திட்டத்தை தயாரித்து பொதுச் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டால் புதிய நிதியாண்டில் இவ்வரவு செலவுத்

திட்ட அடிப்படையில் திட்டமிட்டு வரவுகளைப் பெற்று, செலவுகளையும் நடைமுறைப்படுத்தின என்பதை வருட இறுதியில் கண்டுபிடிக்கவும், பலநட்டங்களை தவிர்த்துக் கொள்வதுடன் சங்கங்கள் எதிர்பார்த்த வரவையும், செலவையும் நடைமுறைப்படுத்தியுள்ளதா அவ்வாறு இல்லாதுவிடின் அதற்கான காரணங்களை கண்டறிந்து கொள்வதற்கும் இலகுவாக இருப்பதுடன், நிதி சம்பந்தமான நடைமுறைச் சிக்கல்களை தவிர்ப்பதற்கும் இலகுவாக இருக்கும். இம்முறைகடந்தகாலங்களில் சங்கங்களிடையே பேணப்படாமல் இருந்நமையைக் காணக்கூடியதாக இருந்தது. எனவே எதிர்காலத்திலாவது இந்த நடைமுறை பின் பற்றப்பட வேண்டும்

## 2. ஊழியர் இடை நிறுத்தமும் தொடர் நடவடிக்கையும்

சில சங்கங்களில் ஊழியரின் குற்றத்திற்காக அவர்களை இடைநிறுத்தப்பட்டிருந்தும் அவர்களுக்கான ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற் கொண்டு முடிவுறு நிலையிலும் சில ஒழுக்காற்று விசாரணை இன்னமும்தொடங்கா நிலையிலும் உள்ளதை அவதானிக்க முடிகின்றது, இவ்வாறான நடவடிக்கையால் சங்கத்திற்கு நிர்வாகச் சிக்கல்களும், நிதி நட்டமும் ஏற்படுகின்றது இவ்வாறான பிரச்சனைகளுக்கு உடனடியாகத் தீர்வுகாண சங்க நிர்வாகம்ஒழுங்குகளைமேற்கொள்ளவேண்டும். தவறின் உதாரணமாக 5 வருடங்களுக்கு முன்னர் இடைநிறுத்தப்பட்ட ஊழியர் விசாரணைமுடிவில் நிரபராதியாக காணப்பட்டுமீண்டும் கடமைக்கு வரும் பட்சத்தில் அவருக்கு அக்காலத்தில் கடமையாற்றாமலேயே பெருந்தொகைப் பணத்தை சங்கம் வழங்கும் நிலை ஏற்படலாம் இது சங்கத்தின் நிதிநெருக்கடிக்கு வழிவகுப்பதுடன் நிர்வாகச் சிக்கல்களையும் ஏற்படுத்தி சங்கத்தின் வளர்ச்சியை மந்தப்படுத்தும். இவ்விடயத்தைக் கவனத்தில் கொண்டு இவ்வாறான சிக்கல்களுக்குத் தீர்வு காணமுறையான நடவடிக்கையை உடன் மேற்கொள்வது சங்க வளர்ச்சிக்கு சாதகமாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

## 3. தவறணைகளில் மாதாந்த கணக்குகளை அவதானித்தல்

சங்க நிர்வாகிகளும், உயமட்ட ஊழியரும் தவறணைகளின் (கிளை) மாதாந்த கொள்வனவு, விற்பனவு, ஏற்பட்ட செலவு, இலாப நட்டங்களை ஒவ்வொரு மாத இறுதியிலும் கூட்டப்படும் சபைக் கூட்டத்தில் அவதானித்து கிளைகளின் செயற்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கருத்தில் கொண்டு நட்டங்களை நீக்குதற்கான வழிகளையும், இலாபத்தை அடைவதற்கான நடவடிக்கைகளையும் மேற்.

கொள்வதன் மூலம் சங்கத்தின் நடவடிக்கைகளை இலகுவாகச் செய்வதற்கு திட்டங்களை மேற் கொள்ளலாம். இக் கருத்தினை ஏற்று எதிர்காலத்தில் செயற்பட முன் வரல் வேண்டும்.

### 4. கல்வி அறிவைப் பெருக்குதல்

அங்கத்தவரும், நிர்வாகிகளும் கல்வியறிவைப் பெருக்க சங்க மட்டத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். இதன் மூலம் சிறந்த நிர்வாக சபையை உருவாக்கும் வாய்ப்பு ஏற்படுவதையும் கூட்டுறவில் ஏற்படும் முரண்பாடுகளை தவிர்த்துக்கொள்வதுடன் நிர்வாகச் சிக்கல்களை இனங்கண்டு இலகுவான முறையில் தீர்த்து சங்க நடவடிக்கைகளை துரிதப் படுத்துவதற்கும் வாய்ப்பாக இருக்கும். இவற்றைக் கருத்தில் கொண்டு சங்க மட்டத்தில் கிளைகள் வாயிலாக கல்வித் திட்டத்தை நடைமுறைப் படுத்த பொது முகாமையாளர்கள் முயற்சிகளை மேற் கொள்ளல் வேண்டும்.

### 5. தெங்கு, பனை ஆகியவற்றை மூலப் பொருளாகக் கொண்ட உற்பத்திகளை மேற்கொள்ளல்

தெங்கு பனம் பொருட் கூட்டுறவுச் சங்கமெனப் பெயர் பெற்ற போதிலும் இச் சங்கங்கள் கள் விற்பனையையும், கள்ளை மூலப் பொருளாகக் கொண்டு உற்பத்தி செய்யும் மதுசார உற்பத்திகளையும் மேற்கொண்டு வருவதையே தற்போது அவதானிக்க முடிகின்றது. மதுவிற்கு தடையான காலமொன்று ஏற்படின் இந் நிறுவனங்கள் செயலிழக்க நேரிடும் எனவே எதிர் காலத்தையுப் கருத்தில் கொண்டு ஏனைய தொழில் முயற்சிகளையும் மேற் கொள்ள சங்கங்கள் முன் வரவேண்டும். இவ்வாறாக பல தொழில்களை செயற்படுத்தும் வேளையில் ஓர் பகுதியில் ஏற்படும் நட்டத்தை மறு பகுதியால் ஈடுசெய்யும் வாய்ப்பும் ஏற்படும். அத்துடன் சீவல் தொழிலாளரின் குடும்ப அங்கத்தவர் சகலருக்கும் வேலை வாய்ப்பளிக்கும் நிலை ஏற்படுவதுடன், அவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுப்பதுடன் சங்கங்களின் நோக்கத்திற்கும் பங்களிப்பு ஏற்படும் என்பதில் ஐயமில்லை. இவ்விடையத்தைகருத்தில்கொண்டு சங்கங்கள் தமது வசதிக்கேற்ப உடனடியாக் வேறு தொழிற்பாடுகளைச் செய்ய நடவடிக்கைகளை எடுக்கும்படி கேட்டுக் கோள்கிறேன்.

### 6. சமாசத்தை வலுப்படுத்துவதில் அங்கத்துவ சங்கங்களின் பங்கு

சகல துறைகளிலும் சங்கங்களின் தேவைகளை இனங்கண்டு நிறைவேற்றும் அளவிற்கு சமாசத்தினை வலிமையுள்ள ஓர் நிறுவனமாக கட்டியமைக்கும் பொறுப்பு சங்கங்களுடைய

சாகும். இதன் மூலமே சமா தத்தை உருவாக்கியதன் நோக் கத்தை சங்கங்கள் அடைய முடி யும் என்பதைக் கருத்தில் கொள்ளல் வேண்டும். இவ்வாறு உருவாக்கின் கூட்டுறவுக் கொள் கைகளுக்கமைய நாளடைவில் சகல அதிகாரங்களுடனும் அங் கத்தவரிடம் ஒப்படைப்பதன் மூலம் இக் கூட்டுறவு நிறுவனம் ஜனநாயகத் தன்மையையும் அடையச் செய்து அவை தமது நோக்கிலிருந்து விலகிச் செல்லா மல் வழிநடத்துதற்கு வாய்ப்பளிக் கும் என்பதில் ஐயமில்லை.

எனவே மேற்படி கருத்துக் களை கவனத்தில் கொண்டு தெ. ப. பொருட் சங்கங்கள் அனைத்தும் செயற்பட முன்வரு வதன் மூலம் நடவடிக்கைகளை இலகுவாக்கி நிறுவனங்களின் நோக்கை இலகுவாகவும் விரிவா கவும் அடைவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

## குறும்புக் கவி

இரவீந்திரநாத் தாகூர் பழைய மரபில் பானு சிம்சன் என்ற புனை பெயரில் ஒரு கவிதை நூலை வெளியிட்டார். அதனை உண்மையான பழைய கவிதை என எல்லோரும் கருதினர். ஜேர்மனி தேசத்தை சேர்ந்த ஒருவர் அக் கவிதை நூலை ஆய்வு செய்து கலாநிதிப்பட்டமும் பெற் றுக் கொண்டார். நாளடைவில் அக்கவிதை தாகூரின் குறும்புக் கவி என்பது வெளியாயிற்று.

## பணத்திற்காக

மானியூர் கே. ரட்னேஷ்

இனம் மறந்து பறந்திடுவார்
இங்கிருந்து வெளியூர்க்கு,
கணப்பொழுதில் மறந்திடுவார்
கருணையுள்ள உற்றோரை
மணம் முடிப்பேன் என்றவளை
மறந்திடுவார் மறுத்திடுவார்
குணமதையும் மாற்றிடுவார்
குற்றங்கள் புரிந்திடுவார்

தானம் என்று செய்திடினும்
தரகர்களை இணைத்திடுவார்
மானத்தையும் விற்றிடுவார்
மாந்தர் தமை மறந்துவிட்டு
ஈனமென்றும் பார்த்திடாது
ஈன்றவர்குத் துயரிழைப்பார்
ஊனமுற்ற மானிடரே
உய்யும் வழி இதுதானோ?

## வேண்டுதல்

ஆண்டவனே!
சமாதானத்திற்கோர்
சம்மதஞ் சொல்
உயிருடனே — நாம்
சாகாமல்,
சாகும்வரை உயிருடனிருக்க.

# தமிழ் எழுத்து சீர்திருத்தம் ஆராயப்பட வேண்டியது.

— வடவராணியூர் சி. சபா. —

**தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்பற்றி இன்று பத்திரிகைகளில் பல்வேறுபட்ட கருத்துப் பரிமாற்றங்களும் வாதப் பிரதி வாதங்களும் நடைபெற்றுக் கொண்டிருப்பதை கற்பக வாசகர்களாகிய நீங்களும் நன்கு அறிந்திருப்பீர்கள். தமிழ் எழுத்து சீர்திருத்தம் என்ற பெயரால் புதிய மாற்றமடையும் எழுத்துக்களினுல் ஏற்படக்கூடிய சில விபரீத விளைவுகளையும், நேர வீணடிப்புகளையும் சுட்டிக்காட்டி கற்பகம் வாசகராகிய வட வரணியூர் திரு. சபாரத்தினம் அவர்கள் தமது கருத்தை முன் வைத்திருக்கிறுர். உங்கள் கருத்துக்களையும் எழுதுங்கள் கற்பகத்தில் பிரசுரிப்போம்.**

**ஆ – ர்.**

தமிழ். இது ஓர் இனிமையான மொழியென்று பல்வேறு மொழி அறிஞர்களால் போற்றப்பட்டுள்ளது பெருமைக்குரியதாகும். தமிழின் ஆரம்ப எழுத்து ''அ'' என்பதாகும். எந்த ஒரு மொழியை தாய் மொழியாகக் கொண்டவர்களும் ஓர் ஓசையை வெளிப்படுத்துவதற்காகவாயைத் திறக்கும்போதே இந்த 'அ' என்ற ஓசைதான் முதலில் வரும். இது தமிழ் மொழியின் தனிச் சிறப்பில் ஒன்ருகும்.

எல்லா ஓசைகளையும் அப்படியே தனித்துவமாக வெளிப்படுத்துவதற்காகவே தமிழ்மொழியில் அதிகமான எழுத்து வடிவங்களை (ஒலி வடிவங்களை) அறிஞர்கள் அறிமுகப்படுத்தியுள்ளனர். அண்மைக் காலத்தில் இந்த எழுத்துக்கள் மாற்றியமைக்கப் படவேண்டும் அல்லது குறைக்கப்பட வேண்டும் என்ற சர்ச்சைகள் பத்திரிகைகளில் வெளிவருவதுடன் தென்னிந்தியாவில் தமிழ் எழுத்துக்களின் சீர்திருத்

தம் ஏற்கனவே நடைமுறைப் படுத்தப்பட்டுவிட்டதையும் நாம் அவதானிக்கலாம். இவ்விடயம் சிந்திக்கக்கூடிய ஓர் பிரதான விடயமாக உள்ளது.

தமிழ் மொழியின் வரிவடிவங்களால் " லகர " " ளகர " பேதங்களும் வெவ்வேறு வகையான வித்தியாசங்களும் அழகாகப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளது. உதாரணமாக "கல்" " கள் " என்ற ஒலியின் வடிவங்கள் தமிழ் மொழியில் பிரித்துக் காட்டப்பட்டுள்ளது போல் ஆங்கில மொழியில் பிரித்துக்காட்டப்படவில்லை. மாறாக Kal என்ற ஒலி வடிவமே இரண்டுக்கும் பொதுவாக அமைந்துள்ளதை நாம் அவதானிக்கலாம். மேலும் ' குறில் ' ' நெடில் ' களைக் குறிப்பதற்கும் வேறு வகையான பேதங்களை இனம் காணுவதற்கும் தமிழ் மொழியிலுள்ள கூடுதலான எழுத்துக்கள் உதவி புரிகின்றன. இதில் மாற்றங்களைக் கொண்டு வர முற்படும்போது நாம் பல்வேறு வகையான சிக்கல்களிலும், பிரச்சனைகளிலும் எதிர்காலத்தில் மாட்டிக் கொள்வோமா என்ற சந்தேகம் ஏற்படுவது இயல்பானதே. கீழ் வரும் உதாரணங்களைக்கொண்டு இச்சிக்கல்களை நாம் எதிர்கொள்ளலாம்.

(1) லை ... னை ...ணை = லை னை...ணை

நடைமுறையிலுள்ள மேற்காட்டப்பட்ட ஒலி வடிவங்கள் எதிர்காலச் சீர்திருத்தத்தின் மூலம் மாறும் விதத்தை நன்கு அவதானிப்போமாகில் கீழ்வரும் பிரச்சனைகளை சமாளிக்க வேண்டியதன் அவசியத்தையும் நாம் நன்கு அவதானிக்க வேண்டும். நடைமுறையிலுள்ள லை...னை... ...ணை...என்ற ஒலி வடிவங்கள் லை...னை...ணை எனத் திருத்தப்பட வேண்டும். இதனால் ஓசைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படாதென்பது உண்மையே ஏனெனில் கை ..சை...பை ...தை... என்ற நடைமுறையிலுள்ள ஒலி வடிவங்களுடன் திருத்தம் செய்யப்பட வேண்டிய ஒலி வடிவங்களும் முழுமையாகவே ஒத்துப் போவதால் இதில் எவ்வித தவறும் இல்லை. தட்டச்சில் பொறிக்கும் போதோ அச்சில் பதிக்கும்போதோ இவை எவ்வித சிரமங்களையும் ஏற்படுத்தாது. ஆனால் இவறை கையெழுத்தாக எழுதும்போது பல்வேறு வகையான பிரச்சனைகள் உருவாகலாம். உதாரணம் "தென்னை " என்ற சொல்லை எழுதும்போது "தென்னன" என்றும் " தென்னையை" என்ற சொல்லை எழுதும்போது " தென்னையை" என்ற வரிவடிவமும் பாவிக்க வேண்டும் ' இங்கே ன்னை என்ற ஒலி வடிவங்கள் தொடர்ச்சியாக இடம் பெறுவதை அவதானிக்கலாம். இவற்றை விரைவாக எழுத முற்படும்போது பல சைவர்களின் (00) சேர்க்கை பிணைந்திருப்பதை அவதானிக்கலாம். இந்

நிலை விளக்கமற்ற அல்லது மயக்கமான தெளிவற்ற நிலை என்பதுடன் ஆரம்ப சிறுர்களுக்குச் சிரமத்தை அளிக்கக் கூடியதென்பதை நாம் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

(2) ரு...சூ...ஞு = றா...சுா னா...

இந்த எழுத்து வரிவடிவங்களை சிறிது உற்று நோக்குவோம், ரு...சூ...ஞு.. என்ற எழுத்துக்களை இனிமேல் சீர்திருத்த முறைப்படி றா...சுா...னா... என மாற்றும்போது ஓசையில் எவ்வித மாறுபாடும் இல்லாத போதிலும் நடைமுறையில் சில சிக்கல்களை எதிர்கொள்ளவேண்டிய நிலையையும் நாம் அவதானிக்கலாம், ஏனெனில் ரு...சூ...ஞு... போன்த எழுத்துக்களின் அடுத்து வரும் எழுத்தாகப் பெரும்பாலும் குற்றெழுத்துக்களே இடம் பெற வேண்டிய சாத்தியங்கள் இருக்கின்றன, உதாரணம். ருத்தல், ருட்டணம், ருல் என்று வரும் மாருக இவற்றை றாத்தல், றாட்டணம், றால் என்று எழுத முயற்சிக்குப்போது எழுத்து வேகம் சற்றுக் குறைவதை நாம் உற்று அவதானிக்கும்போது புரிந்து கொள்ளலாம்,

(3) ஔ...சௌ = அவ்.. சவ்

தமிழ் எழுத்து சீர்திருத்தத்தில் ஏற்கனவே உள்ள எழுத்துக்களில் பலவற்றைக் குறைக்க வேண்டுமென்ற கருத்தும் இடம் பெறுகின்றது. உதாரணத்திற்கு மேலே சொல்லப்பட்ட ஔ... என்ற எழுத்தை முற்ருக நீக்கி எட்டு அவ்... என்ற ஏற்கனவே ள்ள எழுத்துகளைப் பாவிக்க வண்டும் என்பது ஒரு எடு கோளாகும். இநே போன்றே சௌ...கௌ... என்ற வரிசை எழுத்துக்களும் நீக்கப்பட வேண்டும்என்பதாகும்..இந்நிலைபல்வேறு பொருள் கோடலை உருவாக்கக் கூடியதென்பதை பல அறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

உதாரணமாக ''ஔ''வைப் பாட்டிஎன்ற சொல் இனிமேல்சீர் திருத்த முறைப்படி 'அவ்'வைப் பாட்டி.. என்று எழுதப்படும், இந்நிலை அசிங்கமான விரும்பத் தகாத ஒரு பொருள் கோடலை உருவாக்கியிருப்பதை நாம் நன்கு அவதானிக்கலாம். மேலும், சொற்களைச் சேர்த்து, பிரித்து எழுதும்போது வேறு சில மயக்கங்களும் உருவாகக் கூடிய சாத்தியக் கூறும் உண்டு.

எனவே தமிழ் எழுத்தின் சீர்திருத்தம் நன்கு ஆராயப்பட வேண்டும் என்பது தவிர்க்க முடியாத ஒன்ருகும். தட்டச்சில் பொறிப்பதற்காகவோ அன்றி கொம்பியூட்டர் முறையில் இலகுவாக்குவதற்காகவோ எழுத்துக்களில் சீர்திருத்தம் கொண்டு வரப்படவேண்டுமென்பது அலங்காரம் என்ற பெயரில் அலங் கோலமாக இருக்கும் நாகரீகப் போக்கினை ஒத்ததாகும். எழுத்துக்கள் என்ற சொல் எழுதுதல் என்ற செயற்பாட்டிற்கு முக்கி

யத்துவம் கொடுப்பதையே குறிக்கிறது. எனவே, எழுதும்போது ஏற்படும் சிக்கல்களை தவிர்க்க வேண்டிய அவசியத்தை எழுத்துச் சீர்திருத்தம் செய்யப்படுவதற்கு முன்னல் நன்ருகச் சிந்தித்தல் வேண்டும்.

மேலே சொல்லப்பட்ட கருத்துக்களின்படி முதலாம் பகுதியில் குறுப்பிட்டுள்ள விடயம் எழுத்து நடைமுறையில் குழப்பத்தையும் (தெளிவற்ற தன்மையையும்) மயக்கத்தையும் ஏற்படுத்துவதையும், இரண்டாம் பகுதியில் குறிப்பிடப்பட்ட விடயம் கையெழுத்து வேகத்தினை குறைப்பதையும், மூன்றும் பகுதியில் குறிப்பிடப்பட்ட விடயம் பொருள்கோடலை மாற்றுவதையும் கவனிக்கக் கூடியதாக உள்ளதை அவதானிக்கலாம்.

எனவே சீர்திருத்தவாதிகள் இம்மாற்றங்களைக் கவனத்தில் கொண்டு எழுத்துக்களை சீர்திருத்த முன்வரவேண்டுமென்பதை தெளிவுபடுத்த வேண்டுமென்பது அவசியமாகிறது.

★

## விலை மாற்றம்

மின்சாரத் தடை இன்று சகல தொழில் துறைகளையுமே பாதித்துள்ளது. எமது கற்பகம் சில மாதங்களாக வெளிவராததற்கும் இதுவே முதற் காரணமாகும். அத்துடன் பத்திரிகைத் தாளுக்கு ஏற்பட்டிருந்த தட்டுப்பாடும் — கிடைத்தாலும் ஆனை விலை குதிரை விலை என்று போய்விட்டதும் சில துணைக் காரணங்களாகும். இவைபோன்ற இன்னோரன்ன காரணங்களினுல் கற்பகத்தின் விலையில் சிறிது மாற்றம் செய்து ஒரு ரூபாவினுல் அதிகரித்து அதாவது 4/- ரூபா ஆக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. கற்பகம் தனது சமூகப் பணியைத் தொடர்ந்து செய்ய கற்பகத்தின் மேல் அன்புள்ளம்கொண்ட சங்கங்கள், அங்கத்தவர்கள், வாசகர்கள் பெரிதுபடுத்த மாட்டார்கள் என்ற நம்பிக்கை நமக்குண்டு.

தொடர் நவீனம்

அத்தியாயம் → 8

# உண்மையில்லாத உறவுகள்

கே. வி. என்.

அப்ப தான் அல்லி, நான் கொழும்பு, கண்டி, காலி என்டு ஊர் ஊராகத் திரிஞ்ச காலம். என்ன ஏதாவது உத்தியோக நிமித்தமாக அப்பிடியெல்லாம் உலைஞ்சுலைஞ்சு திரிஞ்சதாக நினைக்காதை அல்லி, ஏதாகினும் மொத்த வியாபாரத்திலை முதல் போட்டுத் திரிஞ்சதெண்டும் நினைச்சிடாதை, என்ரை தொழில்தான் தெரியுமே. ஓ, அதை நான் இன்னும் சொல்லவே இல்லையா? அதைத்தான் சொல்லவாறன் கண்டியோ.

அதையெல்லாம் தொழில் எண்டு சொன்னால் இப்ப உள்ள ஆட்கள் சிரிப்பாங்கள். அந்த என்ரை அங்காடி வேலைகளை சின்ன வேலைதானெண்டு ஒண்டைச் சுட்டிப்பாகச் சொல்ல இப்டவும் ஏலாது கண்டியோ. அம்பிடுகிற எல்லாத்தையும் செய்வன். அஞ்சுசதம் என்ரை மடியிலே இருந்து போகாமலுக்குத் தான் பாப்பன். அதுக்கு முதல் கயிறும் கனக்க வேண்டாம் கண்டியோ. மூன்று சதத் தோடையும் வேலையைக் கொண்டோடிவிடுவன். அதுகுமில்லாமலும் தொழில் செய்வன். என்ன ஆரையும் அடிச்சுப்பறிச்சு வழிப்பறி செய்யிற வேலையெண்டு நினைச்சிடாதை. இது இன்னின்னார் செய்யிற வேலை, இது இழிவானது, அது உசந்தது எண்டெல்லாம் நான் பார்த்துச் செய்தது கிடையாது. பொய்பிரட்டில்லாமல் கள்ளன் கடைப்பிளி எண்ட பேரெடுக்காமலும் என்ன கருமத்தைச் செய்தால் என்ன அதிலை என்ன வெக்க மெண்டு கேட்கிறன்.?

''முத்தையாவை இண்டைக்குப் பார்த்த இடத்திலை நாளைக்குப் பார்க்கேலாது. நாளைக்குப் பார்த்த இடத்திலை அடுத்த நாளைக்குப் பார்க்கேலாது அவனொரு சித்தர், முனிவர் மாதிரி ஒரு ஆள். ஆரும் செத்தாலும் கெட்டாலும் எங்கையெண்டு இவனுக்கு அறிவிக்கிறது?'' எண்டெல்லாம் சொல்லுவார்கள் அப்ப எல்லாம் என்னைப் பார்த்து.

அதாலை தான் என்னை ஓல் சிலோன் முத்தையா வெண்டும் கூப்பிடத் தொடங்கினவங்கள் கண்டியோ. நான் ஊர்,

ஊராகத் திரிஞ்சு உலகை அளந்த கிட்டிணராக நிண்டதாலே எனக்கு அந்தப் பேரை வைச்சிட்டாங்கள். அது உண்மைதான் கண்டியோ அல்லி, இந்த இலங்கையிலே எந்தப்பாகத்திலே, எந்த மூலை முடுக்கிலை என்ரை கால்ப்பாதம் படாத இடங்கிடக்கென்று நினைக்கிருய்?எல்லாம் தண்ணிபட்டபாடம். இப்ப எல்லாம் ரோட்டுகளும், காருகளும் வசுவுகளும் வந்து ஊரெல்லாம் றவுன் ஆயிட்டுது. இப்ப இதுகளாலே வெறும் சத்தம்தான் கேட்குதேயொழிய வேறையொன்றுமில்லைக் கண்டியோ. அப்ப என்ன சீரும் சிறப்பும் செழிப்பும், குளிர்மையுமாக நீரோசையாக இருந்த ஊரும் தேசமும் என்கிருய்?

கொழும்பிலே நான் போய் முதலிலே செய்த வேலே எதெண்டு நினைக்கிருய்? பெரிய கடைகளிலே இருந்து கழிச்சு விட்ட ஒட்டைச் சுறுட்டுகளை வாங்கி அதுக்குப் பேந்து என்ரை கைப்பட ஒட்டைகளை அடைச்சு ரேட்டிலே நிண்டு வித்தது தான் அது. அப்ப சில நாளாக அதுக்காக என்னை ஒட்டை சுறுட்டு முத்தையாவெண்டும் கூப்பிட்டவங்கள். எங்கடை ஆட்கள் சொல்லுறதைச் சொல்லட்டும் நமக்கென்ன தோலுக்கையா பூரப் போகுது. என்ரை ஓட்டையும் ஒரு நாளைக்கு அடைபடத்தான் போகுது எண்டு மட்டும் எனக்கு உள்ளுக்குள்ளை நினைச்சுக் கொண்டன் கண்டியோ.

நான் செய்து காட்டிய இந்த ஒட்டைச்சுறுட்டு வியாபாரத்துக்கு பேந்து எத்தினை பேர் போட்டியாக வந்திட்டாங்களெண்டு நினைக்கிருய்? ஒரு தொள்ளாயிரம் பேர். அதோடை அதை விட்டிட்டன் கண்டியோ. கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வந்தால் பேந்து என்ன நடக்குமெண்டு தெரியும்தானே.

சிங்களப்பாசையைத் தலைகறணமாகப் பேசத்துவங்கி விட்டன். பேந்தென்னெண்டு நினைக்கிருய்? அந்த ஊரிலே இருட்டு மாதிரிக் கிடந்ததெல்லாம் ஒரேவெளிச்சமான மாதிரி எனக்குப்பட்டது. இதாலே எங்கையும், எதையும், எப்பிடியும் செய்யக்கூடிய மனத்தைரியம் வந்திட்டுது அதிலையிருந்து அடிக்கத் துடங்கியிட்டுது வெள்ளி திசை எண்டுதான் சொல்லுவன். அதெல்லாம் வீட்டுக்கு வந்தவளின்ரை இலச்சுமிகடாட்சம்தான் கண்டியோ. அல்லி ஒரு ஆம்பிளையின்ரை உழைப்பு ஒரு பெரிய காரியமில்லை. அதை ஆறுந்துனித்தனம் பண்ணுமல் செட்டாகச் சிலவழிச்சு சேமிக்கிற பெண்ணுப்பிறந்தவளிலைதான் எல்லாம் தங்கியிருக்கு. எனக்கே தெரியாது, என்ன உழைச்சன், எவ்வளவு உழைச்சன் எண்டிற சங்கதிபொண்டும். எல்லாம்

அன்னம் சொல்லத்தான் தெரியும்.

அதுக்குப் பிறகு ஒரு ஆயிரம் தொழில் செய்திருப்பன் கொழும்பிலே. இப்ப என்னென்ன எண்டு எனக்கே மறந்து போச்சுக் கண்டியோ? இண்டைக்குப் பார்த்த இடத்திலே நாளைக்குப் பார்க்கேலாது எண்டு சொன்ன மாதிரி நேற்றுச் செய்த வேலையைத்தான் இண்டைக்குச் செய்வன் எண்டிறதும் கிடையாது. இதுக்காக என்னை 'ஒண்டிலேயும் பத்தியப்படாதவன்' எண்டும் சொல்லுவாங்கள்.

அஞ்சுசிப் பழத்தை யாழ்ப்பாணம் கொண்டு வந்து வியாபாரம் செய்தன். இஞ்சையுள்ள பாணிப்பினாட்டு, புழுக்கொடியல், மாம்பழம் எண்டு அங்கையெல்லாம் கொண்டு போய் வியாபாரம் செய்தன், வரத்துடங்கினால் வழி தெருவில் கூட நில்லாமல் வந்து விடும் கண்டியோ. குடுக்கிறதெய்வம் கூரையைப் பிய்ச்சுப் போட்டுக் கூடக் குடுக்கும் எண்டு சொல்லுங்கள். அது உண்மைதான் அல்லி. என்னிலே இருந்தே நான் அதைக் கண்டு கொண்டன். எதைத் தொட்டாலும். மண்ணைத் தொட்டாலும் அது பொன்னாகும் காலம் எண்டு சொல்லுவாங்களே, அந்த மாதிரிக்காலந்தான் எனக்கும் அப்ப. குருச்சந்திர யோகமெண்டு இதைத்தான் சொல்லுறதாக்கும்.

அன்னப்பிள்ளை ஒரு பாவம் கண்டியோ. என்ரை இந்த கூடு விட்டுக் கூடு பாயிற தேசாந்திர வேலை வில்லலட்டியளாலை அவளுக்கொரு நல்ல நாளோ பெருநாளோ ஒண்டும் தெரியாது' அதிலை ஒண்டு தின்னாமல் உண்ணாமல் பணத்தைச் சேர்க்கிறதிலை மட்டும் கெட்டித்தனமாக நிண்டு கொண்டாள் அவள். அதென்னவோ தெரியவில்லை அல்லி. சின்னஞ்சிறிசிலை பட்ட சிறுப்பிளைகளையும், மற்றவையின்ரை சின்னத்தனமான பகிடி சேட்டைகளையும் கேட்டதாலையோ என்னவோ அப்பிடியொரு பணம் தேடுற ஆசை வந்திட்டுது அவளுக்கு. அதுக்காக தானும், நானும் உழையாத ஆற்றையும் உப்புக் கல்லுக்கும் ஆசைப்படவும் மாட்டாள் கண்டியோ. கோழியை வளர்ப்பாள், குஞ்சை வளர்ப்பாள், ஆடு மாடு. அதெல்லாம் அவள் பொறுப்புத்தான்.

இந்தக் கோட்டைக்கு அத்திவாரம் போடுற எண்ணம் அவளுக்குத் தான் முதலிலை வந்தது. அப்பதான் அன்னம் ஒரு நாள் சொன்னாள்.

''எனியாவது உந்த ஊணுறக்கமில்லாமல், ஊர் ஊராகத் திரிஞ்சு உழைக்கிற வேலையை விட்டிட்டு, இஞ்சினை ஒரு கடையைக் கண்ணியை வைச்சுக் கொள்ளுங்கோ. தேகத்தைப் புளிஞ்சு உழைச்சு காஞ்சு கறுத்து தேஞ்சதெல்லாம் போதும்'' எண்டாள்.

''நான் மட்டும் தேஞ்சு போய்விட்டுதெண்டு வறுவாத் துக்கப் படுகிருய்? நீ என்ன பெரிய திமிங்கலமாகவா இருக்கிருய்? கருவாடுபத்திப் போய்க்கிடக் கிருய். புரியனே மட்டும் நோகாமல் வைச்சிருக்க நினைக்கிரு.''

''பிள்ளை நான் ஆரை வளக்கிறது. சுவர் இருந்தால் தான் சித்திரம் எழுதலாமெண்டு உங்கடை பாகடியிலை தான் சொல்ல வேண்டிக் கிடக்கு அதிலையும் எனி இந்த ஓலைக் கொட்டிலை நம்பி கெட்டிபத்திரமா இருக்கேலாது. ஏதாவதொரு வீட்டை வாசலைக் கட்ட வேணும்.''

''அன்னம், நீ சொல்லுறதை நான் இல்லை யெண்டு அல்லைத் தட்டயில்லை. அதுகும் சரிதான் காலாக் கையாக இருக்கையுக்கை நாலு சதத்தை ஓடியாடி உழைச்சுப் போட்டால்தான் நல்லது. எனித் தேயிற காலமொழிய, நாங்கள் வளருகிறகாலமில்லை. இப்ப என்ன அவசரம் என்னுங் கொஞ்சநா பொறன் வீடுகட்ட. ஆக்கப் பொறுத்தனி ஆறப் பொறுக்கக் கூடாதோ''

''எனி என்னெண்டாலும் செய்யுங்கோ. சொல்லுறதைச் சொல்லிப் போட்டன், இஞ்சை கள்ளர் காடற்றை அட்டூழியம் நாளுக்கு நாள் கூடிக் கொண்டு வருகிறது கடைசியிலை ஈப்பி வாயன்தேடி கற்பூர வாயனெட்டைக் குடுத்த கதையாசத்தான் முடியப் போகுது. என்னத்தையெண்டாலும் செய்யுங்கோ, உந்த வெளியூர் வியாபாரங்களை நிறுத்திப் போடுங்கோ.''

கந்தையாவும் அதைத்தான் சொன்னுன். கேட்டியோ அல்லி, என்ரை உற்ற சிநேகிதன் கந்தையாவைத் தெரியும்தானே உனக்கு.

முத்தையாவின் நெஞ்சிலும் நினைவிலும் நிலைத்து விட்ட அவருடைய நண்பன் கந்தையாவை அந்தச் சுவரிலே கண்டார். நீண்ட நேரமெ எனத்துனூடே நெஞ்சை நிறைத்து சுவரை அடைத்து நின்ற நண்பன் கந்தையாவின் பெரிய ஆகிருதியான தோற்றம் தெரிந்தது. அவனுடைய வஞ்சகமில்லாத நெஞ்சிலிருந்து வந்த கதைகளெல்லாம் முத்தையாவின் நெஞ்சில் இப்போதும் எதிரொலித்தன அந்த இனிய நினைவுகளில் மனம் ஒன்றி லயித்த போது முத்தையாவுக்கு அழுகை பொங்கிவந்தது அப்படி நைத்து போன உள்ளத்துடன் அல்லிக்குச் சொன்னுர்.

அல்லி, ஆருமற்றது தாரம் ஊரிலை ஒருவன் தோழன் என்டு சொல்லுவங்கள். அதுக் கேகத்தாப்போலைதான் அன்னமும், கந்தையாவும் எனக்கு வாய்ச்சதுகள்.

அந்தக் காலத்திலை என்ரை உற்ற சிநேகிதன் கந்தையா தானே. அவனைத் தெரியும்

தானே உனக்கும். என்ன சினுங்கிருய்? ஆர்? கந்தையா அப்பு தானே எண்டு கேட்கிறியா? பதினைஞ்சு வரியத்துக்கிடையில எல்லாரையும் மறந்திட்டியோ எண்டு பார்த்தன். அவனைத் தான் சொல்லுறன்.

அவன் கதைக்கேக்கை எப்பிடியெல்லாம் கதைக்கிறவனெண்டு தெரியுமல்லே. பச்சை பச்சையாக பகிடியும் சேட்டையும் விட்டுத்தானே அறுவான் கதைக்கிறவன். குடலறுகிற மாதிரி சிரிக்கிற கதையளைச் சொல்லிச் சொல்லி தானும் சிரிச்சு மற்றவையையும் சிரிக்க வைச்சு பார்க்கிறதில விண்ணுதி விண்ணன்தான். அவனை நினைச்சால்.. ஹம்...... நீதி அறுந்த கடவுள் எல்லாரையும் கொண்டு போவிட்டு என்னை மட்டும் விட்டு வைத திட்டுது. ஹம்..

''என்னகாணும் ஓல்சிலோன் யோசினை பலமாக் கிடக்கு. எந்தக் கப்பல் கவிண்டதுக்காக உப்புடி முகம் விடியாமல் கிடக்குது? இல்லை வேறை ஏதாவது கோட்டை கொத்தளத்தை பிடிக்கிற யோசினையோ? என்ன அன்னத்தின்ரை முகமும் ஒரு மாதிரிச் சுண்டிப் போய்க்கிடக்கு. ஆளுக்காள் கதை வெளிப்படுக் கொண்டார் கள் மாதிரி தெரியுது.'' எண்டு கொண்டே கந்தையா வந்தான்.

''இதில என்னண்ணை ஒளிவு மறைவு. நான் சொன்னன் எனியென்டாலும் ஊரோடை வீட்டோடை நிண்டு பாக்கிற கருமத்தை பாருங்கோ எண்டுதான்''

''அவன் உந்த ஊர் ஊராகத்திரிஞ்சு திண்டு, எங்கை நாக்குக்கு உரிசையானது கிடக்கெண்டு கண்டவனை நீ ஒரு இடத்தில கட்டிப் போட நினைச்சது பின்னைச் சரியோ? நாலிடத்தில மாறிமாறித் திண்டு நாவுக்குரிசைப் பட்டவங்கள், தாயிடத்தில கூடத்தங்கி தரிக்கான்கள் கண்டியோ...அது சரி, எல்லுப் போல தண்ணி தா அன்னம்.''

''என்ன ஏதோ அண்ணனும் தங்கையும் சேர்ந்து மாய் மாலம் போடுறியள். முந்தியே கதைச்சுப்பேசி இப்பிடித்தான் இவனை மடக்க வேணுமெண்டு மடம் கட்டிப் போட்டியள் போலகிடக்கு.''

''ஓய், அவள் பெண்ணுப்பிறந்தவளென்டாலும் அவள் சொல்லுறதில என்ன பிசகிருக்கெண்டு கேட்கிறன்? எதுவோ நாலு காசு எங்களெல்லாரையும் விட, ஆண்டவன புண்ணியத்தாலயும், அவள் வல்லாடிச்சியின்ரை கெட்டித்தனத்தாலயும் உழைச்சு சேர்த்துப் போட்டாய். எனியும் உப்பிடிப் பாஞ்சு பாஞ்சு உழைச்சு தேகத்தைத் தேகம் பாராமலுக்கு அடிச்சு எந்தப் பறணில கட்டி

வைக்கப் போறீர். பணத்தைக் கட்டி வைக்க பறணும்; இல்லை. ஆருக்காக உப்பிடியெல்லாம் ஆளையாள் முகத்தைப் பாராம லுக்கு தூரத்திலை போய் நிண்டு திரிஞ்சு உழைக்க வேணுமெண்டு கேட்கிறன்? ஒரு கண்டு காலியு மில்லை. ஹம்...... நீ வீட்டிலை கிடக்கிற மாம்பழத்தை மறந் திட்டு மரங்களிலை கிடக்கிற மாம்பழங்களை வாங்கி வித்துக் கொண்டு திரி. நாளைக்குக் கதை இப்பிடித்தான் ஆகப் போகுது ...''

''என்னெண்டு?''

ஊணன் கருமமிழந்தான். அம்பலத்தாண்டி பெண்டிலை இழந்தான் எண்டிற கதை மாதி ரித்தான் வரும். என்ன சிரிப்பு? இப்ப சிரிப்பாத்தான் கிடக்கும். பேந்து பின்னடிக்கு நாலு நாள் பத்து நாளெண்டு பாயிலை கிடக் கையுக்கை தான் தெரியும் அது களின்ரை அருமை. அன்னத்துக்கு அந்த ஆசைபாசம் இல்லாமலுக் காபோகும். அவள் பட்டும் படா மலுக்கும் சால்லுறஞாயங்கள் வேறை என்னத்தைக் குறிக்கு தெண்டு நினைக்கிருய்?... பெரிய ஊர் தேச மளந்து ஒல்சிலோன் பட்டமும்எடுத்த ஆள்நீ சொல்லு பாப்பம் இதுக்குக் கருத்தை''

"அதுக்கிப்ப என்ன கந்தையா சொய்யச்செல்லுருய்''

'அன்னம் சொன்னதைத்தான் நானும் சொல்லுவன். முதலில் நீ உந்த ஒடுகாலி வேலையளை விட்டுப்போட்டு ஊரோடை நிற் கிற புத்தியைப்பார், இரண்டா வது இஞ்சைபார்,வீடம்பலம் பட லைசங்கடமெண்ட கதையாககிடக் கிறவீட்டுக் கொட்டிலைநல்லொரு வீட்டுக் கட்டிடத்துக்கு அத்தி வாரம் போடப்பார்''

''முண்டாவது? ......... மூண்டாவதையும் சொல்லி முடியன்'

மூண்டாவதோ கேக்கிருய்? அன்னம் உங்கினை நிக்கிருளோ எண்டு பார். அடுப்படியுக்கையா? சரி, மூண்டாவது என்ன தெரியுமா? ஒழுங்காக நீ அவளை முகத்தை பார்த்துஎவ்வளவு காலமாகுது. எனியாவது ஒண்டாயிருந்து அவளை முகத்தைபார்த்து ஒரு பெடி பெத்துப் போடு.''

''ஹோ, ஹோ ...... ஹோ...... ம், எளிய மூதேசி, எல்லாங் கதை தானை சனியனுக்கு.''

''என்னடாப்பா, ஒரு கண்டத்துக்கு கேக்கக் கூடிய மாதிரி சிரிக்கிருய். நான் சொன்னதிலை என்ன பகிடி இருக்குக் காணும். அவளா பெறமாட்டன் என்கிருள். நீ ஊரெல்லாம் மேஞ்சு போட்டு வந்து மருந்து தீர்ந்த வாணக் கொட்டகாக் கிடந்தால் வாணம்பத்துமோ.?''

'' என்னத்தையும் சொல்லும் உந்தப் பழக்கம் மட்டும் என்னட்டை எண்டைக்கும்

கிடையாதுகண்டியோ. நீஉன்ரை அளவு கோலை என்னிலை வைத்து அளந்து பார்க்கிருய். அது தானே சொல்லுறது காகத்துக்கு கனவிலையும் பீகிண்டிற புத்திதான் வருமெண்டு''

'' ஒய் சும்மா விடுங்காணும் உன்ரை உந்த அரிச்சந்திர விலாசக் கதையை எனக்கெல்லே காது குத்தப் பார்க்கிறீர். உன்ரை ஓல்சிலோன் விளையாட்டுகளை நீ அந்தச் சின்னத்தங்கத் தோடை இருங்காரம் பண்ணிக் கொஞ்சின விஷயம் எனக்குத் தெரியாதெண்டு நினைச்சியோ தம்பி. பூனை கண்ணை மூடிக் கொண்டால் இந்தப்பூலோகமெல்லாம் இருண்டுபோச்செண்டு நினைப்பாக்கும்''

'' ஓ, அதையா சொல்லுறய்? அது கலியாணம் கட்ட முந்தி நடந்த சங்கதிகாணும். அதையேல்லெம் என்னத்துக்கு இப்ப''

'' ஏன் பயமாக் கிடக்கோ?''

''அன்னம் உங்கினை கேட்டுக் கொண்டு நிண்டாலும், ஏதோ நேற்று முந்தநாள் நடந்த அலுவலாக்கும் எண்டு நினைச்சுக் கொண்டுஅடுப்பிலை உலை வையாமல் விட்டிடப் போருள். சரி சரி அவள்வாருள் கதையை சாச்சு விடு''

''ம், அதுதான்நான்சொல்ல வந்த விஷயங்காணும் ஒருபூவைப் பிஞ்சைப் பிடிச்சு, அதிலை இருந்து நாலு கெட்டைக் கிளையை விட்டால்தான் உனக்கும் பலப்பு அவளுக்கும் ஒரு பிடிப்பு ஏற்படும் கண்டியோ. பின்னை பணத்துக்காக வாறதெல்லாம் உருத்தாகி விடுமோ? நல்லாயோசிச்சுப் பார்பாப்பம்''

''நீர் சொல்லுறது சரிதான் கந்தையா, அதிலையொரு சங்கதி யல்லோ. பெறுகிறதும் பெருமல் விடுகிறதும் எங்கடை கையிலையா கிடக்கு. அப்ப ஒன்டு செய்யன், உன்ரை பெடியிலை ஒண்டைத்தா வன் நாங்கள் வளர்க்கிறம்''


''நல்ல கதை தான் எனக்கென்ன மெத்திப் போய்க் கால் கை வழிய மிதிபடுதெண்டு நினைச்சியோ? நான் இன்னுமொரு நாலைஞ்சுக்காவது தெண்டிக்கிறன். போடாசுக்கி மோனை என்று நிக்குது. இப்ப உங்களுக கென்ன வயசா போவிட்டுது? முறையா ஒரு ஓட்டம் ஓடிப்பார். ஏறு மெண்டால் வாறவரியத்துக் கிடையிலை இழுத்தெறி பார்ப்பம் அதுக்குப்பிறகு இரண்டத்தா ஒருத்தனை உன்னட்டை தந்திடுறன்''

'பாழ்படுவானே பார்த்திருந்து பொட்டைக்குட்டிக்கா ஆசீர்வாதம்தாருய்? எல்லாத்தையும் அபகரிக்கிறனென்டுதான் நிக்கிருய்.''

''என்ன இப்பவே சாணைச் சீலை போடுறியள் போலை கிடக்கு அவனைக் காணயில்லையாம் பிள்ளை எத்தினை எண்டு கேட்டவன்ரை

(தொடரும்)

# பாம்போஷா




பனை
அபிவிருத்திச்
சபை
தயாரித்து
வழங்கும்
தரமான
சத்துணவு.

## சகல கற்பகம் விற்பனை நிலையங்கள் மூலமும் விற்பனை செய்யப்படுகின்றன.

**வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்**

தொடர்பு:-

தலைமை அலுவலகம்,
பனை அபிவிருத்திச் சபை,
இல. 47, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

உமா பிறிண்டேர்ஸ், 32, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.